### மத்திய அரசின் கொள்கைகளால் கடந்த 5 ஆண்டுகளில்

(C) KSL Media Ltd.

# வறுமையில் இருந்து மீண்ட 13.50 கோடி மக்கள்

- **டெல்லியில் 55 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற ஜி20 வர்த்தக உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதத்துடன் கூறினார்.**

**புதுடெல்லி**

வறுமையை ஒழிக்கும் நோக்கில், ஏழைகளுக்கு ஆதரவான கொள்கைகளை இந்திய அரசு கடைபிடிப்பதால், கடந்த 5 ஆண்டுகளில் 13.50 கோடி மக்கள் வறுமையில் இருந்துமீண்டுள்ளனர் என்று ஜி20 அமைப்பின் வர்த்தக அமைப்பான பி20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஜி20 நாடுகளின் வர்த்தக அமைப்பான 'பிசினஸ் 20' (பி20) அமைப்பு கடந்த 2010-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதில் ஜி20 நாடுகளை சேர்ந்த நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் பங்கேற்கின்றன. டெல்லியில் பி20 அமைப்பின் உச்சி மாநாடு கடந்த 3 நாட்கள் நடந்தது. இதில் 55 நாடுகளை சேர்ந்த 1,500 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஜி20 அமைப்பில் சமர்ப்பிப்பதற்கான 54 பரிந்துரைகள் மற்றும் 172 கொள்கை நடவடிக்கைகள் பி20 அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

இந்நிலையில், உச்சி மாநாட்டின் நிறைவு நாளான நேற்று பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கடந்த 23-ம் தேதி வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது. இதன் மூலம் இந்தியாவின் பண்டிகை காலம் முன்கூட்டியே தொடங்கி விட்டது. சந்திரயான் திட்டத்தில் தனியார் துறை, குறு சிறு நடுத்தர தொழில் துறையின் பங்களிப்பும் உள்ளது. இந்த வெற்றியை, இந்தியாவுடன் ஒட்டுமொத்த உலகமும் கொண்டாடுகிறது.



↑ ஜி20 நாடுகளின் வர்த்தக அமைப்பான பி20 உச்சி மாநாடு, டெல்லியில் நேற்று நடந்தது. இதில் பங்கேற்ற பிரதிநிதிகளுடன் பேசுகிறார் பிரதமர் மோடி.
படம்: பிடிஐ

நமது முதலீட்டுக்கு அதிகம் தேவைப்படும் விஷயம் பரஸ்பர நம்பிக்கை. இதுதான் கரோனா பெருந்தொற்று நமக்கு கற்றுக் கொடுத்த பாடம். கரோனா பெருந்தொற்று காலத்தில், 150-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தடுப்பு மருந்துகளை இந்தியா அனுப்பியது.

கடந்த சில ஆண்டுகளாக, இந்தியா அமல்படுத்திய கொள்கைகளால், கடந்த 5 ஆண்டுகளில் 13.50 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர். ஏழைகளுக்கு ஆதரவான கொள்கைகளை இந்திய அரசு கடைபிடிக்கிறது. இதன் காரணமாக, வறுமை நிலையில் இருந்து மக்கள் விடுபட்டு, அவர்களது நிலைமை மேம்படும். அடுத்த 5-7 ஆண்டுகளில், நடுத்தர வர்க்க மக்களை நீங்கள் அதிக அளவில் பார்ப்பீர்கள். இந்த புதிய நடுத்தர வர்க்கத்தினர்தான் மிகப் பெரிய நுகர்வோராக இருப்பார்கள். இவர்கள் மூலமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். ஏழைகளின் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் நடுத்தர வர்க்கமும், குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களும் பயனடைகின்றன.

வர்த்தகம்–நுகர்வோர் இடையே சமநிலை இருக்கும்போதுதான் தொழில்கள் லாபகரமாக இருக்கும். இது நாடுகளுக்கும் பொருந்தும். மற்ற நாடுகளை வெறும் சந்தையாக கருதுவது உற்பத்தி நாடுகளுக்கு விரைவில் பாதிப்பை ஏற்படுத்தும். ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச நுகர்வோர் நலன் தினத்தை உலக வர்த்தக சமுதாயத்தினர் கொண்டாடி, நுகர்வோர் நலனில் அக்கறை செலுத்த வேண்டும். இது தொழில் துறையினர் – நுகர்வோர் இடையே நம்பிக்கையை வலுப்படுத்த உதவும்.

நெறிமுறையுடன் கூடிய செயற்கை நுண்ணறிவு ஊக்குவிக்கப்படுவதை உறுதி செய்ய உலகளாவிய தொழில் துறையினரும், அரசுகளும் இணைந்து செயல்பட வேண்டும். ஒருங்கிணைந்த உலகம் என்பது பகிரப்பட்ட நோக்கம், பகிரப்பட்ட வளம், பகிரப்பட்ட எதிர்காலம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

இவ்வாறு பிரதமர் பேசினார்.

வணிக வீதி
உள்ளே...

நவீன சென்சார் கருவிகளின் உதவியுடன்

# நிலவின் வெப்பநிலையை அளவிட்டது லேண்டர்

**சென்னை**

நிலவின் மேற்பரப்பு வெப்பநிலையை ஆய்வு செய்து அதன் விவரங்களை லேண்டர் அனுப்பியுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் 'விக்ரம்' லேண்டர் பாகம் கடந்த 23-ம் தேதி மாலை 6.04 மணிக்கு வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது. இதன்மூலம், நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு எனும் பெருமையை இந்தியா பெற்றது.

சில மணிநேரங்களுக்கு பிறகு, லேண்டரில் இருந்த 'பிரக்யான்' ரோவர் வாகனமும் பத்திரமாக நிலவின் தரைப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டது. லேண்டர், தரையிறங்கிய இடத்தில் இருந்தபடியும், ரோவர், நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்றும் ஆய்வு செய்து வருகின்றன.

இந்நிலையில், லேண்டரில் உள்ள சேஸ்ட் கருவி மூலம் நிலவின் மேற்பரப்பு வெப்பநிலை ஆராயப்பட்டுள்ளது. இந்த



தகவல்களை இஸ்ரோ நேற்று வெளியிட்டது. அதன் விவரம்:

விக்ரம் லேண்டரில் உள்ள சேஸ்ட் (ChaSTE-Chandra's Surface Thermo physical Experiment) சாதனத்தின் முதல் ஆய்வு தரவுகள் கிடைத்துள்ளன. இந்த கருவி, நிலவின் மேற்பரப்பில் உள்ள மணலின் வெப்பநிலையை ஆராய்ந்து வருகிறது. அதன்படி, நிலவின் தரைப் பரப்பில் உள்ள மணலில் இருந்து 10 செ.மீ. ஆழத்துக்கு துளையிட்டு, தனது சென்சார்கள் வாயிலாக வெப்பநிலையை பதிவு செய்துள்ளது. நிலவின் தென் துருவப் பகுதியில் வெப்பநிலை கண்டறியும் சோதனை நடத்தப்படுவது இதுவே முதல்முறை. இந்த சேஸ்ட் சாதனம், திருவனந்தபுரம் விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி மையம் மற்றும் அகமதாபாத் இயற்பியல் ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் கூட்டிணைப்பில் வடிவமைக்கப்பட்டது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

லேண்டர் மூலம் கிடைத்துள்ள விவரங்கள், வரைபடமாகவும் வெளியிடப்பட்டுள்ளது. அதில், நிலவின் மேற்பரப்பில் இருந்து கீழே செல்லச் செல்ல வெப்பநிலை மாறுபடுவது தெரியவந்துள்ளது. தரைப்பரப்பில் சராசரியாக 55 டிகிரியும், 8 செ.மீ. ஆழத்தில் மைனஸ் 10 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும் நிலவுகிறது. லேண்டர், ரோவரின் ஆய்வில் மேலும் பல அரிய தகவல்கள் தெரியவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

EVA STALIN IAS

# தேசிய நல்லாசிரியர் விருது அறிவிப்பு

## ● தமிழகத்தில் 2 ஆசிரியர்கள் தேர்வு

● **சென்னை**

தமிழகத்தில் தேசிய நல்லாசிரியர் விருதுக்கு 2 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மறைந்த குடியரசு தலைவர் ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளான செப்டம்பர் 5-ம் தேதி ஆண்டுதோறும் ஆசிரியர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாளில் சிறந்த ஆசிரியர்களுக்கு மத்திய அரசு சார்பில் விருதுகள் வழங்கி கவுரவிக்கப்படும்.

அதன்படி நடப்பாண்டு தேசிய நல்லாசிரியர் விருதுக்கு நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்களிடம் இருந்து கடந்த ஜூன் மாதம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதிலிருந்து தகுதியான 50 பேர் விருதுக்கு தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதன் விவரப் பட்டியலை மத்தியக் கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அதில் தமிழகத்தைச் சேர்ந்த 2 அரசுப் பள்ளி ஆசிரியர்கள் இடம்பெற்றுள்ளனர். அதன்படி மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் காட்வின் வேதநாயகம் ராஜ்குமார், தென்காசி மாவட்டம் வீரகேரளம்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியை எஸ்.எஸ்.மாலதி ஆகியோர் தேர்வாகியுள்ளனர். கூடுதல் விவரங்களை nationalawardsto teachers. education.gov.in/ எனும் இணைய தளத்தில் அறிந்து கொள்ளலாம்.



**தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள் காட்வின் வேதநாயகம் ராஜ்குமார், மாலதி**

> **ஆசிரியர் தின விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு விருது வழங்கி கவுரவிப்பார்**

தேர்வானவர்களுக்கு செப்டம்பர் 5-ம் தேதி டெல்லி விஞ்ஞான் பவனில் நடைபெற உள்ள ஆசிரியர் தின விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு விருது வழங்கி கவுரவிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் தமிழக அரசு சார்பில் 385 ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் நடப்பாண்டு விருதுக்கு தகுதியானவர்களை இறுதி செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த பணி முடிவடைந்த பிறகு வரும் செப்டம்பர் 1-ம் தேதி பட்டியல் வெளியாக உள்ளதாக துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கருத்துப் பேழை



# சமத்துவம் என்றொரு கனவு!

இன்றும் நாளையும் நாம் துன்பங்களை எதிர்கொண்டாலும், ஒருநாள் இந்தத் தேசம் உயர்ந்து எழும்.



எஸ்.ராமகிருஷ்ணன்
எழுத்தாளர்
தொடர்புக்கு: writerramki@gmail.com

இன்றைய அரசியல் தலைவர்கள் ஆற்றும் உரைகள் பெரிதும் பிறரால் எழுதப்படுபவை. சுயபிம்பத்தைப் பெருக்கிக் காட்டவும் புகழைத் தேடவும் அலங்காரமான சொற்களால் தயாரிக்கப்பட்டவை. சர்வதேச அளவில் இதற்கென நிறைய நிறுவனங்கள் பணியாற்றுகின்றன. அவர்கள் அரசியல் தலைவர்களின் முக்கிய உரைகளைத் தயாரித்து அளிக்கிறார்கள். அதற்காகச் செலவிடப்படும் பணம் மிகப் பெரியது.

பொது மேடையில் எப்படிப் பேச வேண்டும், என்ன உடை அணிந்துகொள்ள வேண்டும், எங்கே பேச்சை நிறுத்த வேண்டும், எப்படிப் பாவனை செய்ய வேண்டும் என்பதற்கான ஒத்திகைகள்கூட நடைபெறுகின்றன. அந்த உரைகளுக்குக் கைதட்டுவதற்கான ஆள்களையும் அவர்களே ஏற்பாடு செய்துதருகிறார்கள். ஆனால், அது போன்ற உரைகளில் உண்மையின் குரல் ஒலிப்பதில்லை. அவை காகித மலர்கள்போல் இருக்கின்றன. அச்சிட்டுப் படிக்கும்போது சல்லடையில் தண்ணீர் அள்ளியது போன்ற உணர்வே ஏற்படுகிறது.

**வரலாற்றும் சிறப்புமிக்க உரை:** நல்ல சொற்பொழிவு என்பது கேட்பவரின் இதயத்தைத் தொட்டு, அவர்களின் சிந்தனையிலும் செயலிலும் மாற்றத்தை உருவாக்கக்கூடியது. 1963இல் வாஷிங்டன் லிங்கன் சதுக்கத்தில் இரண்டரை லட்சம் மக்களின் முன்பாக மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் ஆற்றிய உரை, அது போன்றதொரு நிகரற்ற உரை.

இணையத்தின் உதவியால் இன்று அந்த உரையைக் கேட்க முடிகிறது. எழுச்சிமிக்க மக்களின் கூட்டத்தைக் காணும்போது, அது எவ்வளவு முக்கியமான நிகழ்வு என்பதையும் உணர முடிகிறது.

மார்ட்டின் லூதரின் குரல் கம்பீரமானது, வசீகரமானது. அவரது உரையை ஒரு சொற்பொழிவு என்று சொல்வதைவிடவும் நீதிமன்றத்தில் எடுத்து வைக்கப்பட்ட வாதம் என்றே கூற வேண்டும். மார்ட்டின் லூதர் நிதானமாக, அழுத்தமாக நீதியின் குரலை வெளிப்படுத்துகிறார்.

எழுத்து வடிவில் தயாரிக்கப்பட்ட உரை அது. ஆனால், அதை மனதிலிருந்தே மார்ட்டின் லூதர் பேசுகிறார். அவரது குரலின் வழியே அமெரிக்க தேசத்தின் வரலாறும் கறுப்பின மக்களின் துயர வாழ்வும் போராட்டத்தின் தேவையும் அழுத்தமாக வெளிப்படுகின்றன.

**விடுதலைக்கான கனவு:** "நான் ஒரு கனவு காண்கிறேன்" என்கிற அவரது முழக்கம் ஆப்ரிக்க அமெரிக்கர்களுக்கு மட்டுமின்றி, உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பெரும் உத்வேகத்தையும் நம்பிக்கையையும் உருவாக்கியது. சத்தியத்தின் ஆற்றலை உணரவைத்தது.

இந்த உரையில் எட்டு முறை தனது கனவைப் பற்றி மார்ட்டின் லூதர் குறிப்பிடுகிறார். கனவின் பக்கங்களைப் புரட்டி அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை விரிவாகச் சொல்கிறார். உண்மையில் தனக்குள் என்றைக்கோ உருவாகி, வளர்ந்து நிற்கும் மாறாக் கனவை மக்களிடம் நினைவுபடுத்துகிறார் என்றே சொல்ல வேண்டும். அமெரிக்கச் சமூகத்திடம் மட்டுமின்றி இனவெறியோடு நடந்துகொள்ளும் அனைவரின் முன்பும் அவர் தனது கனவை எடுத்துச்சொல்கிறார்.

அது சமத்துவத்துக்கான கனவு; சமூக நீதிக்கான கனவு; அடிமைப்படுத்தப்பட்ட இனம் தன் விடுதலைக்காகக் கண்ட கனவு!

**தூய அன்பின் அழைப்பு:** நிறபேதம், இனபேதம் கொள்ளாமல் மனிதர்களைச் சமமாகக் கருதவும் அவர் தம் உரிமைகளைப் பெறவும் போராட்டமே வழி, தீர்வு. முடிவில்லாத போராட்டமே நீதியைப் பெற்றுத்தருகிறது என்பதை மார்ட்டின் லூதர் கிங் உணர்ந்திருக்கிறார். அதிகாரத்தின் அடக்குமுறைகள் பற்றி அவருக்குப் பயமில்லை. தான் காலத்தின் பிரதிநிதி என்று உணர்ந்திருப்பதை அக்குரலில் காண முடிகிறது.

போராட்டத்துக்கான அறைகூவல் என்றாலும், அதில் துளிகூட வெறுப்பில்லை. மோதலுக்கான தூண்டுதல் இல்லை. தூய அன்பின் அழைப்பாகவே ஒலிக்கிறது.

நாம் தனித்து நடக்கவும் முடியாது, திரும்பிச் செல்லவும் முடியாது என்று மார்ட்டின் லூதர் கிங் சொல்வது முற்றிலும் உண்மை. போராட்டக் களத்தில் நிற்பவர்களுக்கு என்றைக்குமான ஆப்த வாசகம் அது.

"அமெரிக்க மக்கள் அனைவரும் சமம் என்ற அரசியல் சாசன உறுதிமொழியை ஒரு காசோலையாக அடையாளப்படுத்தி, அந்தக் காசோலையைப் பணமாக்குவதன் பொருட்டே, நாம் தலைநகர் நோக்கிப் படைபெடுத்திருக்கிறோம். நமக்கு நீதி வழங்க வேண்டிய வங்கி, அந்தக் காசோலையை ஏற்க மறுக்கிறது" என்று மார்ட்டின் லூதர் மிக எளிமையாக, நெருக்கமாகத் தனது கருத்தை மக்கள் மனதில் பதியவைப்பது சிறப்பாக உள்ளது.

**நீதியின் வெளிச்சம் பரவ...** கறுப்பின மக்களையும் வெள்ளை இனத்தவரையும் சகோதர சகோதரிகளாகவே அவர் கருதுகிறார். ஒன்றாகக் கைகோத்து வாழ வேண்டும் என்றே வலியுறுத்துகிறார். கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கான அந்தக் கூட்டத்தில், அறுபதாயிரம் வெள்ளையர்கள் கலந்துகொண்டிருந்தார்கள் என்பது முக்கியமானது.

"பிரிவினைக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளாகி வரும் என் நண்பர்களுக்குச் சொல்கிறேன். இன்றும் நாளையும் நாம் துன்பங்களை எதிர்கொண்டாலும், ஒருநாள் இந்தத் தேசம் உயர்ந்து எழும்" என்று மார்ட்டின் லூதர் கிங் சொன்னது, அந்தக் கனவின் மீது கொண்டிருந்த நம்பிக்கையாலேதான். இது அமெரிக்காவுக்கு மட்டுமின்றி, இந்தியாவுக்கும் பொருந்தக்கூடியதே.

மாற்றத்துக்கான கனவு மட்டுமில்லை, அந்தக் கனவை எடுத்துச்சொல்லும் சிறந்த தலைவர்களும் தேவைப்படுகிறார்கள். இன்று நாம் அடைந்திருக்கும் வளர்ச்சியும் பெற்றிருக்கும் உரிமைகளும், இதுபோன்று கனவை முன்னெடுத்த மனிதர்களால் உருவானவையே.

அநீதியின் இருள் நம்மைச் சுற்றிச் சூழ்ந்து வருகிறது. அதற்கு எதிராக நீதியின் வெளிச்சத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டிய காலத்தில் நாம் வாழ்கிறோம். நீதியின் வெளிச்சத்தைப் பரவிடுகிறது என்பதாலே இன்றும் மார்ட்டின் லூதர் கிங்கின் உரை முக்கியமானதாகிறது.

**உரையை வாசிக்க:** https://bit.ly/MLKSpeechText
**உரையைப் பார்க்க:** https://bit.ly/MLK_Speech

ஆகஸ்ட் 28: 'நான் ஒரு கனவு காண்கிறேன்' உரையின் 60 ஆண்டுகள் நிறைவு

# விளாத்திகுளத்தில் 9-ம் நூற்றாண்டு பிடாரி சிற்பம் கண்டெடுப்பு

**கோவில்பட்டி**

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே 9-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிடாரி சிற்பம் கண்டெடுக்கப்பட்டு, உப்பளத் தொழிலாளர்களால் வணங்கப்பட்டு வருகிறது.

விளாத்திகுளம் அருகே பெரியசாமிபுரம் கிராம உப்பள பகுதியில் மிகவும் பழமையான பிடாரி சிற்பம் கண்டெடுக்கப்பட்டது. தகரசெட் அமைத்து அந்த சிற்பத்தை அதில் வைத்து உப்பளத் தொழிலாளர்கள் வணங்கி வருகின்றனர்.



விளாத்திகுளம் அருகே கண்டு எடுக்கப்பட்ட பிடாரி சிற்பம்.

பாண்டியநாடு பண்பாட்டு மைய வரலாற்று ஆர்வலர் குணசேகரன், பண்பாட்டு மைய தொல்லியல் ஆய்வாளர் ஸ்ரீதர் ஆகியோர் பிடாரி சிற்பத்தை ஆய்வு செய்தனர்.

அவர்கள் கூறியதாவது: இந்த சிற்பம் பிடாரி என்ற ஏகவீரி அன்னையாகும். தொடக்க காலங்களில் தாய் தெய்வ வழிபாடு முக்கியத்துவம் பெற்று இருந்தது. தவ்வை, கொற்றவை, சப்தமாதர்கள் என, பல்வேறு தாய் தெய்வ வழிபாடுகள் இருந்தாலும், இந்த சிற்பங்கள் அனைத்தும் ஊருக்குள் வைத்து வழிபாடு செய்யப்பட்டன.

ஆனால், ஏகவீரி அன்னை ஊரின் எல்லையில் தான் இருப்பாள். பெரியசாமிபுரத்தில் பிடாரி சிற்பம் 4 அடி உயரம், 2 அடி அகலத்தில் உள்ளது. இந்த சிற்பத்தின் காலம் 9-ம் நூற்றாண்டு ஆகும். எல்லைப் பிடாரி என்ற பெயரும் உண்டு. காளியின் அம்சமாகவும் கருதப்படுகிறது.

தலையில் கரண்ட மகுடம், கழுத்தில் ஆபரணங்களுடன் காட்சி தருகிறார். வலது காதில் பிடாரி சிற்பத்துக்கே உரித்தான பிரேத குண்டலம், இடது காதில் பத்ர குண்டலம் உள்ளது.

சூலாயுதம், வாள் உள்ளிட்ட ஆயுதங்கள் மற்றும் உடுக்கை தாங்கிய 8 கரங்களுடன் அன்னை உக்கிரமாக காட்சி தருகிறாள். இடது கீழ் கையில் அசுரனின் தலை உள்ளது. பிடாரி அன்னையை அரசர்கள் போர் தெய்வமாக வணங்கியுள்ளனர். இங்கு ஆரியம்மன் என்ற பெயரில் மக்கள் வணங்கி வருகின்றனர்.

பெரியசாமிபுரம் கிராம பகுதியிலிருந்து மக்களும் பிடாரிக்கு பொங்கல் வைத்து வழிபடுவது குறிப்பிட வேண்டிய அம்சம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# சந்திரயான் -3 வெற்றி பெண் சக்தியின் உதாரணம்

## மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்

**புதுடெல்லி**

சந்திரயான் -3 திட்டத்தின் வெற்றி பெண் சக்தியின் உதாரணம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை மனதின் குரல் வானொலி நிகழ்ச்சி மூலம் மக்களிடம் பிரதமர் உரையாற்றி வருகிறார். இதன்படி 104-வது மனதின் குரல் நிகழ்ச்சி நேற்று ஒலிபரப்பானது. இதில் பிரதமர் நரேந்திர மோடி கூறியிருப்பதாவது:

சந்திரயான் -3 திட்டம் வெற்றி அடைந்து கடந்த 23-ம் தேதி நிலவின் தென் துருவத்தில் இந்தியா கால் பதித்தது. இது வரலாற்று சிறப்புமிக்க வெற்றியாகும், புதிய இந்தியாவின் அடையாளமாகும். எந்தவொரு சவாலான சூழலில் இந்தியாவால் வெற்றிவாகை சூட முடியும் என்பதை உலகுக்கு நிரூபித்துள்ளோம்.

கடந்த சுதந்திர தினத்தில் செங்கோட்டையில் உரையாற்றியபோது பெண்களின் தலைமை குறித்துப் பேசினேன். சந்திரயான்- 3 திட்டத்தில் பெண் விஞ்ஞானிகள், பெண் பொறியாளர்கள், பெண் திட்ட இயக்குநர்கள், பெண் மேலாளர்கள் என பல்வேறு நிலைகளில் பெண்கள் திறம்பட பணியாற்றினர். இப்போது இந்தியாவின் மகள்கள் விண்வெளிக்கு சவால் விடுகின்றனர். தங்களது லட்சிய பயணத்தில் அதிவேகமாக முன்னேறி வருகின்றனர். இதன் மூலம் வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியா உருவெடுப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. சந்திரயான் -3 திட்டத்தின் வெற்றி, பெண் சக்தியின் உதாரணமாகும்.

இந்த ஆண்டுக்கான ஜி-20 அமைப்பின் தலைமை பொறுப்பை இந்தியா ஏற்றிருக்கிறது. இந்தியாவின் பன்முகத்தன்மை, ஜனநாயகத்தை பார்த்து ஜி-20 பிரதிநிதிகள் வியந்து பாராட்டி வருகின்றனர்.

வரும் செப்டம்பரில் இந்தியாவின் திறன் உலகத்துக்கு பறைசாற்றப்பட உள்ளது. அதாவது அடுத்த மாதம் டெல்லியில் ஜி-20 அமைப்பின் உச்சி மாநாடு பிரம்மாண்டமாக நடத்தப்பட உள்ளது. சுமார் 40-க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் 15-ம் தேதி சுதந்திர தினத்தை உற்சாகமாக கொண்டாடினோம். அப்போது வீடுகள்தோறும் தேசிய கொடியை ஏற்றி தேசப்பற்றை பறைசாற்றினோம். அஞ்சல் நிலையங்கள் மூலம் மட்டும் சுமார் 1.5 கோடி தேசிய கொடிகள்



பிரதமர் நரேந்திர மோடி

விற்பனை செய்யப்பட்டு உள்ளன. இதன் மூலம் நமது தொழிலாளர்கள், நெசவாளர்கள், பெண்களுக்கு வருமானம் கிடைத்திருக்கிறது. கடந்த ஆண்டு சுதந்திர தினத்தின்போது சுமார் 5 கோடி பேர், தேசிய கொடியுடன் செல்பி எடுத்து இணையத்தில் பதிவிட்டனர். இந்த ஆண்டு, இந்த எண்ணிக்கை 10 கோடியை தாண்டியுள்ளது.

'என் மண், என் தேசம்' இயக்கம் தீவிரம் அடைந்திருக்கிறது. செப்டம்பர் மாதத்தில் ஒவ்வொரு கிராமம், ஒவ்வொரு வீட்டிலிருந்தும் புனித மண்ணை சேகரிக்கும் பிரச்சாரம் தொடங்கப்படும். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து எடுக்கப்படும் புனித மண் ஆயிரக்கணக்கான அமுதக் கலசங்களில் ஒன்று திரட்டப்படும். அக்டோபர் இறுதியில் ஆயிரக்கணக்கான அமுதக் கலச யாத்திரை, தலைநகர் டெல்லியை வந்தடையும். நாடு முழுவதும் இருந்து கொண்டு வரப்பட்ட புனித மண்ணிலிருந்து டெல்லியில் அமுத பூங்கா உருவாக்கப்படும்.

### சம்ஸ்கிருத நாள் வாழ்த்து

மனதின் குரல் நிகழ்ச்சிக்காக இந்த முறை எனக்கு சம்ஸ்கிருத மொழியில் ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. இதற்குக் காரணம், ஆகஸ்ட் 31-ம் தேதி உலக சம்ஸ்கிருத தினம் ஆகும். இதற்காக இப்போதே சம்ஸ்கிருத நாள் வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். உலகின் தொன்மையான மொழிகளில் சம்ஸ்கிருதமும் ஒன்று. இது பல நவீன மொழிகளின் தாய். தொன்மை, அறிவியல், இலக்கணத்துக்காக இன்றளவும் சம்ஸ்கிருதம் போற்றப்படுகிறது.

இந்தியாவின் தொன்மையான அறிவு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சம்ஸ்கிருத மொழியில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதன்காரணமாக யோகா, ஆயுர்வேதம், உளவியல் போன்ற துறைகளில் ஆய்வு செய்பவர்கள், இப்போது சம்ஸ்கிருதத்தை கற்றுக் கொள்கிறார்கள். இன்று நாட்டு மக்களிடையே சம்ஸ்கிருதம் குறித்த விழிப்புணர்வும், பெருமித உணர்வும் அதிகரித்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. நமது தாய் மொழி, நம்மை நமது வேர்களுடன் இணைக்கிறது. தாய்மொழியுடன் நாம் இணையும் போது, நமது கலாச்சாரத்துடன் இணைகிறோம். நமது நற்பண்பு, பாரம்பரியத்துடன் இணைகிறோம்.

### தெலுங்கு தின வாழ்த்து

இந்தியாவின் மற்றொரு பெருமைமிக்க தாய்மொழி தெலுங்கு ஆகும். ஆகஸ்ட் 29-ம் தேதி தெலுங்கு தினத்தை கொண்டாட உள்ளோம். இதற்காக இப்போதே தெலுங்கு தின வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். தெலுங்கு மொழியின் இலக்கியம், பாரம்பரியத்தில் இந்திய கலாச்சாரத்தின் பல விலைமதிப்பற்ற ரத்தினங்கள் மறைந்துள்ளன. தெலுங்கு மொழியின் பாரம்பரியத்தை நாடு முழுவதும் கொண்டு செல்ல பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.